**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாள் வியாழக்கிழமை</u>

**<u>இ.ம.எண்.05/2023 இன் அ.வ.எண்.435/2015</u>**

வேல்விழி ... மனுதாரர்/ வாதி

/ எதிர் /

1) சுபைதாபீபி
2) பாத்திமாபீபி
3) சபீனாபேகம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4) சார்பதிவாளர், ஆனைமலை ... கட்சிசேர்க்கப்பட வேண்டிய நபர்

இம்மனுவானது கடந்த 10.04.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ரங்கராஜன், அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.மீரான் மொய்தீன் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம், அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித எதிருரையும் தாக்கல் செய்யாமலும், மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**<u>ஆணையுரை</u>**

4 ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 13.11.2017 தேதியன்று 1, 2 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரான சபீனாபேகம் பெயரில் வழக்கு சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள். ஆகவே, ஆனைமலை சார்பதிவாளரான 4ம் எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் ஆவார். எனவே, 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்யவில்லை.

**4)** மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** **<u>பிரச்சினை</u>** :

மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 13.11.2017 தேதியன்று 1, 2 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரான சபீனாபேகம் பெயரில் வழக்கு சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள் என்றும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் 4வது எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதால் அவர் இவ்வழக்கிற்கு அவசியதரப்பினர் என்றும், ஆகவே அவரை இவ்வழக்கில் கட்சிசேர்க்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கானது வழக்கு ஏ அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும், வழக்கு ஏ அட்டவணை சொத்தை வாதி பயன்படுத்துவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், வழக்கு பி அட்டவணை சொத்தில் வாதிக்குள்ள அனுபவ சுவாதீனத்திற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ எந்த இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) வழக்கு நிலுவையில் இருக்கும் விபரம் தெரிந்தே 1, 2 எதிர்மனுதாரர்கள், 3ம் எதிர்மனுதாரர் பேரில் 4ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார்கள். ஆகவே, மேற்கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்கையில் வழக்கை முடிவு செய்வதற்கு 4ம் எதிர்மனுதாரர் அவசியதரப்பினர் இல்லை என்றாலும், தேவையான தரப்பினர் (Proper party) ஆவார். ஆகவே, இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, நேரிய வழக்கு விசாரணைக்கு 4ம் எதிர்மனுதாரர் தேவையான தரப்பினர் என்பதால் அவரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டசருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (18.04.2024) அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2024.04.18 19:20:33 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்</u>**
**<u>தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2024.04.18 19:20:24 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**<u>அசல் ஆணையுரை</u>**
இ.ம.எண்.05/2023 இன் அ.வ.எண்.435/2015
நாள் : 18.04.2024
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

-----------------------------------